# அனல்

01.05.2026

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

புதுமலர்: 23 இதழ்: 03 வைகாசி - ஆனி




2026 May - June

சீயோன் தேவாலயப் பிரசுரம்
Zion Church Publication

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. குறுக்கெழுத்துப்போட்டி - 131
06. வாலிபர் வளாகம்
07. வினா விடை - 133
08. பெண்கள் பக்கம்
09. அருட்பணியாளர் சரிதை
10. படித்ததில் சில.....
11. அனலின் ஆன்மீக விருந்து
12. பக்தர்கள் பயிலகம்
13. ஆண்களிடம் பேசக்கூடாதா?
14. தேவன் தந்த வைரங்கள்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


**சீயோன் ஜெபக்குழு,**
**இல 29, 29/1,**
**இராமையாச் செட்டியார் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.





T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

தேவனுடைய கிருபையினாலே இவ் ஐந்தாம் மாதத்தில் மூன்றாவது அனலின் ஊடாக இவ்வாண்டில் உங்களைச் சந்திப்பதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன்.

உலகம் முழுமையும் எத்தனையோ விதமான அழிவுகளையும், காலநிலையில் மாற்றங்களும், யுத்தங்களும், போட்டிகள் நிறைந்தவைகளுமாய்க் காணப்படுகின்றது. இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வெப்பம் அதிகரித்து காணப்படுகின்றது. ஆனாலும் இவைகள் அனைத்தின் மத்தியிலும் தேவன் நம்மைக் காத்துவருகின்றார், போஷிக்கிறார். இந்த கடைசி காலத்தில் உங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுங்கள். சூழ்நிலைகள் மாறலாம், காலநிலைகள் மாறலாம், ஆனால் கர்த்தர் மாறாதவர். அவரை எப்போதும் சார்ந்திருங்கள். எல்லாவற்றிற்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள். உங்கள் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளுங்கள்.

தேவனுடைய பிள்ளைகளின் அழகு என்பது அது பரிசுத்தமாக வாழ்வதே. தானியேலின் வாழ்க்கை குற்றமில்லாத வாழ்க்கை. **தானியேல் 6:4 அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்; ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது; அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை.**

மனிதர்களாலும் அவரிடம் உண்மையான குற்றத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. தேவனுக்கு முன்பாகவும் அவர் குற்றமற்றவராக இருந்தார். **தானியேல் 6:22 சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்; அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான்.**

தேவனுக்கு முன்பாக குற்றமற்றவனாக இருப்பவனே மனிதர்களால் குற்றஞ்சாட்டப்பட முடியாத மனிதன்.

எனவே கர்த்தருக்கு முன் உங்களை ஆராய்ந்து தூய்மையடையுங்கள். இயேசு கிறிஸ்து தாமே உங்களை ஆசீர்வதித்துப் பாதுகாப்பாராக.

**- ஆசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## "தேவன் மீது நம்பிக்கை – ஒரு ஆயுதம் இல்லாத வீரன்"

❒ வை. விமலதாஸ்

இது இரண்டாம் உலகப்போர் காலம். அமெரிக்காவில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவன் டெஸ்மண்ட் டாஸ். சிறுவயதிலிருந்தே அவன் மனதில் ஒரு வித்தியாசமான எண்ணம் இருந்தது —

"யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது."

அவன் வீட்டில் ஒரு படத்தைக் காண்பான் — அது காயமடைந்த ஒருவருக்கு உதவி செய்யாமல் விட்டு சென்ற மனிதர்களின் படம். அந்த படம் அவன் மனதில் ஆழமாக பதிந்தது. "நான் ஒருநாளும் இப்படிச் செய்யமாட்டேன்... நான் எப்போதும் உதவுவேன்," என்று அவன் முடிவு செய்தான்.

போர் ஆரம்பித்தது. நாட்டிற்காக சேவை செய்ய வேண்டும் என்று நினைத்த டாஸ், படையில் சேர்ந்தான். ஆனால் ஒரு நிபந்தனை: "நான் துப்பாக்கி எடுக்கமாட்டேன். நான் யாரையும் கொல்லமாட்டேன்" என்றான். அதைக் கேட்ட மற்ற வீரர்கள் சிரித்தார்கள்.

"போர்க்களம் விளையாட்டு இல்லப்பா... ஆயுதம் இல்லாமல் நீ அங்கே உயிரோடே இருக்க முடியாது," என்று கேலி செய்தார்கள். சிலர் அவனைத் தள்ளி வைத்தார்கள். சிலர் அவனை அடித்தும் விட்டார்கள். ஆனால் டாஸ் ஒருபோதும் தன் நம்பிக்கையை விட்டுவிடவில்லை.

"நான் தேவனை நம்புகிறேன். நான் உயிர்களை காப்பாற்ற வந்தவன்," என்று அவன் அமைதியாக சொன்னான். இறுதியில், அவனை ஒரு மெடிக் (உதவி செய்யும் வீரன்) ஆக அனுப்பினார்கள்.

**ஒகினாவா — மரணத்தின் மலை**

போர் மிகக் கடுமையாக நடந்த இடம் — ஒகினாவா. அங்கு "ஹாக்சா ரிட்ஜ்" என்று அழைக்கப்படும் உயரமான பாறை. அந்த மலை மீது ஏறிச் செல்லவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கடினம். மேலே சென்றதும் — குண்டுகள், துப்பாக்கி சத்தம், கத்தல்கள்... ஒரே குழப்பம்.

அந்த தாக்குதலில் பல வீரர்கள் கீழே விழுந்தார்கள். பலர் காயமடைந்து அங்கேயே கிடந்தார்கள். படை பின்வாங்கியது.

ஆனால்...டாஸ் மட்டும் அங்கேயே இருந்தான். "தேவனே... இன்னும் ஒருவரை..." அந்த இரவு இருள் மூடியது. காயமடைந்தவர்கள் உதவி கேட்டு அழுதார்கள். டாஸ் ஓடினான். ஒரு வீரனை தூக்கி கொண்டு வந்து, ஒரு கயிறு மூலம் மெதுவாக கீழே இறக்கினான்.

பிறகு அவன் கண்களை மூடி பிரார்த்தித்தான்: "தேவனே... இன்னும் ஒருவரை காப்பாற்ற உதவி செய்யும்." மீண்டும் ஓடினான். மீண்டும் ஒருவரை காப்பாற்றினான். இப்படி... மீண்டும்... மீண்டும்... மீண்டும்...அவன் கைகள் காயமடைந்தது. உடல் சோர்ந்தது. ஆனால் அவன் நின்றதே இல்லை.

ஒவ்வொரு முறையும் ஒரே வார்த்தை: "இன்னும் ஒருவரை..." 75 உயிர்கள் — ஒரு நம்பிக்கையின் வெற்றி அந்த இரவு முடியும் வரை, டாஸ் சுமார் 75 வீரர்களை காப்பாற்றினார்.

யாரையும் கொல்லாமல்...ஒரு துப்பாக்கியும் இல்லாமல்...அவன் வெற்றி பெற்றான். அடுத்த நாள், மற்ற வீரர்கள் அவனை வேறு பார்வையில் பார்த்தார்கள். நேற்று வரை அவனை கேலி செய்தவர்கள்...இன்று அவனை மரியாதையுடன் பார்த்தார்கள். "நீ எங்களைக் காப்பாற்றினாய்..." என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு மனிதன்... ஒரு நம்பிக்கை... ஒரு அதிசயம்

போருக்குப் பிறகு, டாஸ் அமெரிக்காவின் உயர்ந்த விருதான "Medal of Honor" பெற்றார்.

ஆனால் அவர் எப்போதும் சொன்னார்: "நான் எதுவும் செய்யவில்லை... ஒவ்வொரு முறையும் நான் ஜெபித்தேன்... தேவன் தான் எனக்கு வலிமை கொடுத்தார்."

ஆம் நண்பர்களே, பார்த்தீர்களா இந்தச் சம்பவத்தை: ஒரு போர்க் களத்தில் கரங்களிலே ஆயுதம் இல்லாமல் ஒரு வீரன் செய்த செயலைப் பார்த்தீர்களா? எத்தனை மனிதர்களின் உயிர்களை காப்பாற்றியிருக்கிறார். அதே போல நாமும் கூட பல காரியங்களை எம்மால் செய்ய முடியாது, எம்மால் இயலாது என்று சோர்ந்து போயிருக்கலாம். ஆனால் தேவனுடைய கிருபை இருந்தால் அவர் எல்லாவற்றையும் செய்ய வைப்பார். எனவே தேவன் மேல் விசுவாசத்தை வைத்து நல்ல காரியங்களை செய்வோம். மற்றவர்களை வாழவைப்போம்.

**பிலிப்பியர் 4:13 என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




❒ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு... அனலின் மூலமாக இனிய வாழ்த்துக்கள். கடந்த நான்கு மாதங்களும் கூட இருந்து பாதுகாத்த தேவன் இனிவரும் மாதங்களிலும் தம்முடைய மிகுந்த கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துவாராக.

**சங்கீதம் 84:5 உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தாங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.**

ஒரு மனிதனுக்கு பெலன் எப்போது தேவையென்று தெரிகின்றதென்றால் பெலவீனமான நேரத்திலேயாகும். இப்படி பெலவீனப்படுகின்ற நேரத்திலே நாம் எதைக் கொண்டு பெலப்பட முயல்கின்றோம் அல்லது யோசிக்கின்றோம். எம்முடைய முயற்சிகள் எப்பொழுதும் எம்மை இன்னும் பெலவீனத்திற்குள்ளே தான் கொண்டு போகும். மாறாக நாம் தேவனில் பெலன்கொள்வோமானால் எம்முடைய பெலவீன சூழ்நிலைகளை தாண்டிவர தேவன் நமக்கு போதிய பெலனைத் தருவார்.

பயங்கரமான சூழ்நிலைகளின் மத்தியிலே கர்த்தரிலே பெலன் கொண்ட மனிதர்களை நாம் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

**1சாமுவேல் 30:6 தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்.**

தாவீது பெலிஸ்தருடைய தேசத்திலே சிக்லாக் என்னும் இடத்தில் அறுநூறு மனிதரோடும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனைவி பிள்ளைகளோடும் குடியிருக்கின்றான். ஒரு சமயம் தாவீதும் அவன் மனுஷரும் இல்லாத நேரத்திலே அமலேக்கியர் வந்து சகலவற்றையும் கொள்ளையடித்து எல்லோரையும் உயிரோடு பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். தாவீது வந்து பார்க்கும் போது எல்லாம் சுட்டெரிக்கப்பட்டு கொள்ளையாடப்பட்டதை அறிகின்றான். கூட இருந்தவர்களும் மனைவி பிள்ளைகளை பறிகொடுத்து துக்கப்பட்டுக் கொண்டு மனதிலே வேதனையோடு இருக்கின்றார்கள். இப்படி நடந்த சம்பவத்திற்கு தாவீதுதான் காரணம் என்பது எல்லோருடைய நினைவும். வேதனை தாங்க முடியாமல் கூட இருந்தவர்கள் தாவீதைக் கல்லெறிந்து கொல்ல யோசிக்கின்றார்கள்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இப்படித்தான் இந்த உலகம். நம்மாலே நன்மைகள் கிடைக்கும் போது நம்மைக் கொண்டாடுவார்கள். அதே வேளை நமது நிமித்தம் சில சிக்கல்களுக்கு முகம் கொடுக்க தயங்குவார்கள். இலாபமா? பங்குபோடவருவார்கள் – நஷ்டமா? விலகிவிடுவார்கள். தீமை செய்யவும் தயங்கமாட்டார்கள்.

இந்த சூழ்நிலைமையிலே தான் தாவீது தன்னை கர்த்தருக்குள்ளே திடப்படுத்திக் கொண்டான். அதாவது பெலப்படுத்திக் கொண்டான்.

தன்னை மட்டுமல்ல தன்னோடு கூட இருந்தவர்களையும் வார்த்தையால் பெலப்படுத்தி யுத்தத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று வெற்றியோடு திரும்பிவர காரணமாக மாறினான்.

ஆம் பிரியமானவர்களே, தாவீது சூழ்நிலைமைகள் மத்தியிலே எப்படி பெலப்பட்டான். ஆம்,

**1சாமுவேல் 30:7-8 (7.) தாவீது அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தார் என்னும் ஆசாரியனை நோக்கி: ஏபோத்தை என்னிடத்தில் கொண்டு வா என்றான்; அபியத்தார் ஏபோத்தைத் தாவீதினிடத்தில் கொண்டு வந்தான். 8. தாவீது கர்த்தரை நோக்கி: நான் அந்தத் தண்டைப் பின்தொடர வேண்டுமா? அதைப் பிடிப்பேனா என்று கேட்டான். அதற்கு அவர்: அதைப் பின் தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய் என்றார்.**

கர்த்தருடைய ஆசாரியரிடத்திலே கர்த்தருடைய வார்த்தையைத் தேடினான். அதனாலே பெலன் அடைந்தான். மற்றவர்களையும் அதே வார்த்தையைக் கொண்டு பெலப்படுத்தினான். பெரிய வெற்றியைக் கண்டான்.

பிரியமானவர்களே உங்கள் வாழ்க்கையிலும் சூழ்நிலைகள் மத்தியில் வியாதி, கடன், வறுமை, பிரிவு, இழப்பு, அவமானம், நஷ்டம், பிள்ளைகளால் வேதனை... இப்படி கண்ணீருக்குள்ளே நாட்களை கழித்து பெலவீனப்பட்டுப்போய் இருக்கின்றீர்களா? உங்கள் பெலவீனமான சூழ்நிலைமைகளின் மத்தியிலே பெலன் கொள்வதற்கு கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும் அவருடைய ஊழியர்களையும் நாடுங்கள். நீங்கள் பெலன் கொள்வீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாறாக உங்களுடைய மாற்று முயற்சிகள், வழிகள் உங்களை இன்னும் பெலவீனத்திற்குள்ளே வழி நடத்தும்.

**எபேசியர் 6:10 கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.**

என்று அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதுகின்றார்.

பவுல் என்ற தேவனுடைய ஊழியக்காரனை பாருங்கள். கடலிலே புயலில் அகப்பட்டு எத்தனையோ நாட்களாக திசை தெரியாது, கரை தெரியாது, திகைத்து கூட வந்தவர்களுக்கும் பிழைப்போம் என்ற நம்பிக்கை அற்றுப்போன சூழ்நிலையிலே:

**அப்போஸ்தலர் 27:22-26 (22.) ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது. 23. ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று: 24. பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான். 25. ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன். 26. ஆயினும் நாம் ஒரு தீவிலே விழவேண்டியதாயிருக்கும் என்றான்.**

கர்த்தரிலே பெலப்பட்டவனாக, கர்த்தரால் பெலப்படுத்தப்பட்டவனாக கூட வந்து சோர்ந்து போன நிலைமையில் இருந்தவர்களையும் பெலப்படுத்தி கரை சேர்ப்பதற்கு ஏதுவானது.

காரணம்: பவுல் கர்த்தரிலே பெலப்பட்டதே... 'என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு' என்று பவுல் கூறுகின்றார்.

ஆம் பிரியமானவர்களே, நாமும் சூழ்நிலைகள் மத்தியிலே கர்த்தரிலே பெலன் கொள்வோம். வல்லமையால் செயற்படுவோம். கர்த்தர் நம்மை நிறைவாக ஆசீர்வதிப்பார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கை எதைப் போன்றது...?

ஜசிந்தா அக்கா




ஒரு வயல் வெளிக்கு சில வெண்மையான புறாக்கூட்டம் வருவது வழக்கம். ஒவ்வொரு நாளும் கூட்டமாக வந்து தங்களுக்குத் தேவையான அளவு தானியங்களைக் கொத்திக் கொத்தி சாப்பிடும். அவைகளைப் பார்க்கும் பொழுது மிகவும் அழகாக இருக்கும்.

அந்த வயல் வெளிக்கு இரண்டு காகங்கள் வந்து தானியங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அவ் வேளையில் 'நண்பா திரும்பிப் பார், எவ்வளவு அழகான வெண்மையான புறாக்கூட்டம். நாமும் அவைகளோடு போய்ச் சேர்ந்து கொள்வோமா?' என்று சொல்லி இருவரும் பறந்து புறாக்கூட்டத்திற்குள் சென்றன. உடனே புறாக்கள் சட் என்று செட்டை அடித்துப் பறந்துவிட்டன.

ஏமாற்றம் அடைந்த காகங்கள் புறாக்களோடே நாம் எப்படிச் சேரலாம் என்று யோசித்தனர். 'புறாக்களுக்கு விருப்பமான தானியத்தைக் கொண்டு செல்வோம்' என்றது ஒரு காகம். 'சீச்சி... அது சரிப்பட்டு வராது... என்னிடத்தில் சுப்பர் ஐடியா இருக்கிறது' என்றது மற்றைய காகம். 'என்ன ஐடியா? சொல்லு... சொல்லு...' என்று ஆவலுடன் கேட்டது. சொல்கிறேன் கேள்.

நண்பா நாங்கள் கறுப்பாய் இருக்கிறதினால் யாரும் எங்களை விரும்புகிறதில்லை. ஆகவே ஒரு இடத்தில் வீடு வெள்ளையடிப்பதற்காக சுண்ணாம்பு கரைத்து வைத்திருக்கிறார்கள். நாங்கள் அங்கு சென்று அதற்குள் பிரண்டு நம்மை வெள்ளையாக்கி வருவோம் என்று சொல்லிச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அப்படியே வெண்மையாகி வந்தனர். அங்கு வீதி ஓரத்தில் செத்த நாய் ஒன்று இருப்பதைக் கண்டு அதைக் கொத்திச் சாப்பிடத் தொடங்கின.

மிகுந்த சந்தோஷத்தோடு ருசித்து.. ரசித்து.. சாப்பிடும் பொழுது இடி மின்னல் முழக்கத்தோடு பெருமழை பெய்தது. கண் இமைக்கும் நேரத்தில் வெண்மையான புறாக்கள் தங்கள் கூட்டத்திற்குள் பறந்து சென்றுவிட்டன.

அந்தோ... பரிதாபம்! காகங்களின் உண்மையான தோற்றம் வெளிப்படும் படியாக பெருமழையில், பூசப்பட்ட வெள்ளைச் சுண்ணாம்பு கரைந்து போய்விட்டது. காகங்களின் ஆசைகளும் நிறைவேறவில்லை. இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள். <u>உங்கள் வாழ்க்கை புறாவின் வாழ்க்கையா? அல்லது காகத்தின் வாழ்க்கையா?</u>

பிள்ளைகளே இயேசு வரும்போது வெள்ளையடிக்கப்பட்ட காகம் போல் உங்களுக்குள் நாற்றமெடுக்கும் கெட்ட பொல்லாத குணங்கள் வெளிப்படும். அப்பொழுது வெட்கமடைவீர்கள்.

தூய்மையாய் வாழும் புறாவைப் போன்ற பிள்ளைகள் இயேசுவோடு போய்விடுவார்கள்.

எது உங்களுக்கு வேண்டும்? சிந்தியுங்கள்......!

**1பேதுரு 1:16 நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

'பழிவாங்க சதி செய்து, தங்களைப் போல மாறினால்
ஏற்றுக்கொள்வோம் என்று கூறி இணங்கப்பண்ணி, மூன்றாம்
நாளில் ஊர் மக்கள் யாவரும் நோவோடு இருக்கையில்
ஆண்மக்கள் யாவரையும் வெட்டிக்கொன்ற ஏக சகோதரர்
யாார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2026 பங்குனி - சித்திரை மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

அம்னோன், ஆமான், லாசரு
(2சாமுவேல் 13:20-29, எஸ்தர் 7:1-10, யோவான் 12:2

*சரியான விடை எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | ✷ | | | 03 |
| | | | ✷ | | | | 04 | |
| 05 | | 06 | | | | | ✷ | |
| ✷ | ✷ | | | | 07 | | | |
| ✷ | | 08 | ✷ | | | | 09 | ✷ |
| | | | | 10 | | | | |
| | | | | ✷ | | | 11 | |
| | | | 12 | | | | | |
| 13 | 14 | | ✷ | | | | | 15 |

## குறுக்கெழுத்துப் போட்டி 131

### இடமிருந்து வலமாக

01. எல்க்கானா இந்த ஊரைச் சேர்ந்தவன்
06. இசக்கார் புத்திரருக்கு கிடைத்த நாட்டின் எல்லையிலுள்ள ஒரு பட்டணம்
07. தான் பிறந்த நாளை சபித்தவர்
10. தேனை சாப்பிட்டதினால் கண்கள் தெளிந்தவன்
12. பார்வைகள் பலவிதம், அதில் ஒவ்வொன்றும் ஒருவிதம். சவுல் பார்த்த பார்வையாம், அது தாவீதைப் பார்த்த பார்வையாம்

### வலமிருந்து இடமாக

03. 'பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகின்றது' என்றவர்
04. 'இஸ்ரவேலையெல்லாம் உம்மிடத்தில் திருப்ப, என் கை உம்மோடிருக்கும்' என தாவீதிடம் கூறியவன்
07. யோயாக்கீமின் குமாரரில் ஒருவன்
09. கர்த்தருடைய ........... நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்
11. 'அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்' என வேலைக்காரனிடம் கூறியவன்
15. இவன் மிகாயாவை கன்னத்தில் அடித்தான்

### மேலிருந்து கீழாக

02. குற்றமில்லாத இரத்தத்தை மிகுதியாகச் சிந்தியவன்
03. குயவன் வீட்டுக்குப்போன தீர்க்கதரிசி
06. இவன் தவறான பொருத்தனை செய்தான்
08. பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் விநோதமான வேலைகளை செய்வதற்கு இவன் தேவனாலே பெயர் சொல்லி அழைக்கப்பட்டவன்

### கீழிருந்து மேலாக

05. இவன் இரதத்தை விட்டிறங்கி கால்நடையாய் ஓடிப்போனான்
12. யூதா கோத்திரத்திலிருந்து கானானை சுற்றிப்பார்க்கப் போனது
13. இவன் யோவாபின் சகோதரனும், செருயாவின் குமாரனும் ஆவான்
14. அகோலியாபின் அப்பா
15. கழுதையின் பச்சைத் தாடையெலும்பை வைத்து பலரைக் கொன்றவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமுள்ள தேவ பிள்ளைகளே, உங்கள் அனைவருக்கும் நல்ல இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். நீங்களும் உங்கள் குடும்பமும் நன்றாக இருக்க வேண்டும் என இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன்.

உங்களது சூழ்நிலையைப் புரிந்து கொண்டு உங்களுக்கு உதவி செய்ய யாருமில்லாத சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? வாழ்க்கையே சுமையாகிப் போன நிலையில் ஏற்ற உதவி இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றீர்களா? ஆதரவை எதிர்பார்த்த இடத்தில் வெளிப்பட்ட எதிர்ப்பினால் வெட்கப்பட்டு நிற்கின்றீர்களா?

உங்களுக்காகவே இந்த வேததியானம். நம்பிக்கை யின் ஆண்டவர் உங்களைத் தேற்றி நடத்த வல்லவராக இருக்கின்றார்.

கானானிய ஸ்திரீயைக் குறித்து வேதம் சொல்கிறது: அவளது மகள் பொல்லாத பிசாசினால் கொடிய வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தாள். 'அவர்களுடைய குடும்பமே உதவியில்லாமல் தவித்துக் கொண்டிருந் தது. எந்தளவு அவர்களை சிறுமைப்படுத்த முடியுமோ அந்தளவு பிசாசு அவர்களை சிறுமைப்படுத்திக் கொண்டிருந்தான். நின்மதியே இல்லாமல் குடும்ப மாகத் துன்பப்பட்டுக் கொண்டு நின்றார்கள்.' என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்வது? யாரிடம் போவது? எல்லாமே அவர்களை கைவிட்டது. அந்தளவு கொடிய பிசாசு அவர்கள் மேல் மும்முரமாக நின்றான்.

இந்த சூழ்நிலையில் தான் அந்த ஸ்திரீ ஆண்டவர் இயேசுவிடம் வந்து தன் நிலமையைச் சொல்லி ஆண்டவரின் உதவிக்காக கதறினாள்.

**மத்தேயு 15:25 அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள்.**

உம்மைவிட எனக்கு யாருமில்லையப்பா, ஆண்டவரே என் குடும்பத்தின் வேதனைமாற உதவி செய்யும் என்று கர்த்தர் பாதத்தில் மண்டியிட்டாள். அவளுக்கு ஆண்டவர் கொடுத்த பதில் என்ன?

**மத்தேயு 15:28 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.**

பார்த்தீர்களா? அருமையான தேவபிள்ளைகளே, **இன்றைக்கும் உங்களுக்கு உதவி செய்ய ஆண்டவர் போதுமானவராக இருக்கிறார்.** விசுவாசஜெபத்தின் மூலமாக கர்த்தரிடம் மன்றாடுங்கள். ஆண்டவரே என் வேதனையை மாற்றும், ஆண்டவரே என் கண்ணீரைத் துடையும், ஆண்டவரே எனக்கு நிம்மதி தாரும்... என அவரிடம் கேளுங்கள். நிச்சயம் அவர் உங்களுக்கு உதவி செய்வார். அவரின் அற்புதக்கரம் உங்களுக்காக நீட்டப்படும். நிச்சயம் இந்த தொல்லைகளில் இருந்து உங்களுக்கு விடுதலை கிடைக்கும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

வாலிபர் வளாக வேதபாடத்தில் சாது சுந்தர் சிங்கைக் குறித்து தியானித்து வருகின்றோம். அந்த வகையில் அவரது பிறப்பு, அவருக்கு கிடைத்த தெய்வீக அழைப்பு, அவர் கர்த்தருக்கென்று செய்த ஊழியம், ஊழியத்தில் அவர் சந்தித்த சவால்கள் என அவரது வாழ்க்கையின் பெரும்பகுதியினை உங்களுக்கு புரியத்தக்க வகையில் சுருக்கமாக பகிர்ந்து கொள்கின்றேன்.

இவ் இதழில் அவரது முடிவு காலத்தை விபரித்து அவரது வாழ்க்கை வரலாற்றினை முடித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பல தேசங்கள் சென்று பிரசங்கித்த சாது சுந்தர் சிங் அவர்கள் திபெத்தில் பல தடவைகள் ஊழியம் செய்துள்ளார்.

அவரது இறுதி வாழ்வினைக் குறித்து பல மர்மங்களாகவே உள்ளன. இறுதியாக அவர் தனது நண்பர்களுக்கு எழுதிய கடிதத்தில் ஓர் குறிப்பினைக் காணமுடிகின்றது. அதில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*'பிரயாணத்தின் கடினத்தினையும் அதிலே ஏற்பட இருக்கும் அபாயங்களினையும் நான் முழுவதுமாக உணர்ந்த போதிலும், நான் இன்றைக்கு திபெத் நோக்கிப் பிரயாணம் செய்கிறேன். ஏனென்றால் நான் என்னுடைய கடமையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்'* என்று 1929ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி தன்னுடைய நண்பர்களுக்கு எழுதிய குறிப்பில் எழுதியிருந்தார். சாது சுந்தர் சிங் அவர்கள் திபெத் சென்றுவிட்டு அவர் திரும்பி வருவதற்கான சமயம் கடந்துவிட்டது. ஆனால் அவரோ திரும்பிவரவில்லை. எவ்விதமான செய்தியும் அவரிடத்திலிருந்து கிடைக்கவில்லை. ஒரு வேளை அவர் பிரயாணத்தில் மலைச்சிகரங்களைக் கடந்து செல்லும் போது இறந்திருக்கலாம். அல்லது ஓர் ஆழமான கிணற்றிலே தூக்கிப் போடப் பட்டிருக்கலாம். அல்லது ஜாக் என்னும் எருமையின் நனைந்த தோலுக்குள்ளாக வைத்துக் கட்டப்பட்டு சுருட்டப்பட்டு அவருடைய எலும்புகள் முறிக்கப்பட்ட நிலையில் அவர் ஓர் இரத்த சாட்சியாக மரித்திருக்கலாம்.

இவைகள் அனைத்தும் ஊகங்களே. ஆனால் அந்த பரிசுத்தவானின் முடிவினை ஆண்டவர் ஒருவரே அறிவார். அவரது முடிவு எப்படியாக இருந்தாலும் **'இந்திய தேசத்தின் அப்போஸ்தலன்'** என அழைக்கப்படும் சாது சுந்தர் சிங் தனக்கான ஜீவ கிரீடத்தை பெற்று ஜெயம் பெற்றார் என்பது மட்டுமே உறுதியானதாகும்.

பிரியமுள்ள வாலிப சகோதர சகோதரிகளே! சற்று சிந்தித்துப் பாருங்கள். எவ்வித வசதிகளுமற்ற 1900ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது இளமையை அர்ப்பணித்து தேவ பணி செய்த இந்த தேவ மனிதர் எவ்வளவு இடர்களைச் சந்தித்திருப்பார். சாலை வசதிகள் இல்லை, போக்குவரத்து வசதிகள் இல்லை. தொடர்பாடல் எதுவுமே அற்ற சூழ்நிலையிலும் அர்ப்பணிப்புடன் அவர்கள் செய்த ஊழியத்தினை சிந்தித்துப்பாருங்கள்.

இன்றைய சூழ்நிலையில் எவ்வளவு வசதி வாய்ப்புக்கள் எமக்கு கிடைத்துள்ளன. ஊழியம் பாடுகள் நிறைந்தது தான். இருப்பினும் அக் காலத்தில் தேவ மனிதர்கள் சந்தித்த எத்தனையோ சவால்கள் எமது காலப்பகுதியில் குறைந்துள்ளது என்பதே நிதர்சனமான உண்மையாகும். இதனை வாசிக்கின்ற நீங்கள் ஏன் ஓர் அர்ப்பணிக்கப்பட்ட தேவ மனுஷனாக எழும்ப முடியாது. **சிலுவை அன்பு உங்களை நெருக்கி ஏவவில்லையா?**

யூதாஸ் காரியோத்திற்கு ஆண்டவர் கொடுத்த நல்ல வாய்ப்புக்களை தவறவிட்ட சந்தர்ப்பங்களை உங்களுக்கு விலாவாரியாக எழுதிவருகின்றேன். அவர் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட பன்னிரு சீடர்களில் ஒருவராக இருந்தார் என்பதையும் அதனை எப்படி தவறவிட்டார் என்பதனையும் உங்களுக்கு புரியும்படி எழுதியிருந்தேன். அவருக்கு கிடைத்த இன்னொரு வாய்ப்பைக் குறித்து இங்கே பார்ப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**யூதாஸ் நற்செய்தி ஊழியங்களைச் செய்தார்; அற்புத ஊழியங்களைச் செய்தார். வியாதிஸ்தர்களைச் சுகமாக்கி, பிசாசுகளைத் துரத்தும் பாக்கியங்களைப் பெற்றார்.**

**லூக்கா 9:1-6 (1.) அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, 2. தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார். 3. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: வழிக்குத் தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக்கொண்டு போக வேண்டாம்; இரண்டு அங்கிகளைக் கொண்டுபோகவும் வேண்டாம். 4. எந்த வீட்டிலே பிரவேசிக்கிறீர்களோ, அங்கே தங்கி, அங்கிருந்து புறப்படுங்கள். 5. உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எவர்களோ அவர்களுடைய ஊரைவிட்டு நீங்கள் புறப்படும்போது, அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள் என்றார். 6. அவர்கள் புறப்பட்டுப்போய், கிராமங்கள்தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்.**

இயேசு தன் சீஷர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார். அந்த வல்லமையை நிறைவேற்ற அதிகாரத்தையும் கொடுத்தார். எத்தனை மகத்துவம், வல்லமை, அதிகாரம் இவை தேவனால் கிடைப்பதற்கு எவ்வளவு பாக்கியம் பெற்றிருக்க வேண்டும். இதனை யூதாஸ் பெற்றிருந்தார். இயேசு கொடுத்த வல்லமையையும், அதிகாரத்தையும் யூதாஸ் என்ன செய்தார்? எனும் கேள்வி எழும்புகிறதல்லவா? அதற்கான விடையினை லூக்கா 9:6 சொல்கிறது.

ஆம் யூதாஸ் ஊழியத்தின் நிமித்தமாக எங்கும் போனார். கிராமங்கள் தோறும் ஊழியத்திற்காக அலைந்து திரிந்தார். பிணியாளிகளையெல்லாம் தேவ வல்லமையால் சுகமாக்கினார். எவ்வளவு அற்புதமான ஊழியம் அவருக்கு கிடைத்திருந்தது. ஆண்டவர் இயேசுவோடும் அவருடைய சீஷர்களோடும் எப்பொழுதும் ஐக்கியமாக இருக்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாது ஜனங்கள் மத்தியில் நட்புறவோடும், நற்பெயரோடும் நடமாடும் கிருபைகளைப் பெற்றிருந்தார். வியாதிப்பட்ட ஒருவன் தேவ வல்லமையால் யூதாஸின் ஊழியத்தின் மூலம் சுகமாக்கப்படும் போது அந்த ஆத்துமாவின் சந்தோஷத்தை யூதாஸ் பார்க்கும் போது எவ்வளவு தேவனைத் துதித்திருப்பார்.

*ஒரு தடவை ஆலயத்தில் கட்டட வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது குறிப்பிட்ட ஒரு விசுவாசி தமது வீட்டிற்கு அருகில் உள்ள ஒருவருக்காக ஜெபிக்க வரும்படி துரிதப்படுத்தினார்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சரி போய் ஜெபிப்போம் என அங்கே சென்றால், மரித்த சடலத்தை குளிப்பாட்டுவதற்காக வளர்த்தி இருப்பது போல் வீட்டின் வெளி முற்றத்தில் படுக்க வைக்கப்பட்டிருந்தார். அயல் ஜனங்கள் ஆங்காங்கே குழுமி இருந்ததைக் காண முடிந்தது. ஜெபம் செய்வதற்கான தைரியம் அற்றுப்போனது. இருப்பினும் திடப்படுத்திக் கொண்டு சில நாட்களாக உணவு இன்றி, உணர்ச்சி இன்றி இருக்கும் அம் மனிதனுக்காக ஜெபித்தேன். ஜெபம் செய்யும் போது ஒரு சிறிய அசைவு மாத்திரமே காணப்பட்டது. மற்றப்படி சொல்லக்கூடிய மாற்றம் எதுவுமே காணப்படவில்லை. மறுபடியும் அதே நாள் இரவும் அவருக்காக ஜெபிக்கப்பட்டது. பார்வைக்கு அது அம் மனிதனின் இறுதி நேரம் போலவே காணப்பட்டது. வேதனையுடன் திரும்பி வந்துவிட்டோம். நள்ளிரவு இரண்டு மணியளவில் அவ் வீட்டிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. என்னவென்று விசாரித்த போது அம் மனிதன் கண்கள் விழித்து, உணர்வடைந்து, நீராகாரம் பருகின்றார் என்றார்கள். அல்லேலூயா எவ்வளவு மகிழ்ச்சி. காலையில் செல்லும் போது பிணத்தைப் போன்று படுத்திருந்த மனிதன் ஓடிவந்து கட்டியணைத்து கண்ணீர்விட்டு தேவனைத் துதிப்பதனைப் பார்த்த சந்தோஷம் அதனை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

ஆம் யூதாஸ் இதிலும் மேலான உன்னத அனுபவங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இந்த நல்ல செயல்களில் யூதாஸ் தொடர்ந்து சென்றாரா என்று பார்த்தால் பரிதாபம். அவர் தனது முடிவை மாற்றிக் கொண்டு பிழையான வழியில் சென்று தன்னைத் தானே அழித்துக் கொண்டார்.

பிரியமுள்ள வாலிபர்களே, உன்னத அனுபவங்களை அனுபவிக்கும் பாக்கியமும் உங்களுக்கு முன் உள்ளது. அதே நேரம் உலக சிற்றின்பங்களில் மூழ்கி உங்களை நீங்களே கெடுத்தக் கொள்ளும் சந்தர்ப்பமும் உங்களுக்கு முன் உள்ளது.

எதனை நீங்கள் தெரிவு செய்யப்போகின்றீர்கள்? தீர்மானம் உங்கள் கைகயில்......?

யூதாஸின் தீர்மானங்கள் தொடரும்...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வினா விடை - 133

01. 'அதை நாய்களுக்குப் போட்டுவிடுங்கள்' என்றவர் யார்?
02. தன் தாய் கொடுத்த வெள்ளிக் காசில் சுரூபத்தையும், விக்கிரகத்தையும் செய்தவன் யார்?
03. கட்டிலின் மேல் சுரூபத்தை வைத்து மறைத்து தன் தகப்பனை ஏமாற்றிய மகள் யார்?
04. வேலைக்காரன் ஓடிவருவதைக் கண்டு இரதத்தை நிறுத்தி சுகசெய்தி விசாரித்த படைத்தலைவன் யார்?
05. இராக்காலம் இல்லாத நகரம் எது?
06. மகாராஜா யார்?
07. எல்லாத்தீமைக்கும் வேரான பண ஆசையால் ஊழியத்தை இழந்த இருவர் யார்?
08. மரிப்பதற்காக தனியே மலையில் ஏறினவன் யார்?
09. ஆசாரியனாயிருந்த நியாயாதிபதி யார்?
10. மகாராஜாவின் நகரம் எது?

# குறுக்கெழுத்துப் போட்டி - 130, வினா விடை - 132

## சரியான விடை எழுதியவர்கள்

**பொன்னகர்**
01. மை.நந்தினி
02. எஸ்.திஸ்பியா

**காரைநகர்**
03. அ.தெபோரா
04. உ.சாத்ராக்
05. உ.ஜெரூஷா
06. சிவாஜினி
07. லோ.வதனி

**சங்கானை**
08. ம.டயானி
09. ம.இன்னிஷா

**பாண்டவெட்டை**
10. சி.சிவனேஸ்வரன்
11. சி.நிஜானா
12. சி.சுமித்திரா

**கிளிநொச்சி**
13. அ.அனுஜன்

**கனடா**
14. குகன்

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குறுக்கெழுத்துப் போட்டி - 130

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

02. எசேக்கியா (2நாளாகமம் 31:11)
05. பிக்தான் (எஸ்தர் 2:21–23)
08. நீதிமான் (சங்கீதம் 64:10)
09. பிலேயாம் (எண்ணாகமம் 24:17)
10. சேபூல் (நியாயாதிபதிகள் 9:36)
14. அகித்தோப்பேல் (2சாமுவேல் 17:23)

**வலமிருந்து இடமாக**

02. எபெனேசர் (1சாமுவேல் 7:12)
03. சாமுவேல் (1சாமுவேல் 15:1)
07. ஏனோஸ் (ஆதியாகமம் 4:26)
12. கோரேஸ் (எஸ்றா 1:3)
13. எசேக்கியேல் (எசேக்கியேல் 8:3)

**மேலிருந்து கீழாக**

01. பென்யமீன் (ஆதியாகமம் 49:27)
04. தானியேல் (தானியேல் 9:23)
06. யெரோபெயாம் (1இராஜாக்கள் 13:34)

**கீழிருந்து மேலாக**

07. ஏசாயா (ஏசாயா 13:10)
11. யோசேபியாத் (2நாளாகமம் 22:11)
14. அத்தாலியாள் (2நாளாகமம் 22:10)
15. யாக்கோபு (ஆதியாகமம் 49:6)

---

# வினாவிடை 132

## சரியான பதில்கள்

01. சப்பீராள் (அப்போஸ்தலர் 5:8-10)
02. இஸ்ரவேலர் (அப்போஸ்தலர் 7:42-43)
03. தானியேல் - காபிரியேல் தூதனைக் கண்டபோது (தானியேல் 8:15-17)
04. நினிவே பட்டணம் (நாகூம் 3:7,16)
05. தாமார் (ஆதியாகமம் 38:26)
06. யோய்தா (2நாளாகமம் 24:2,15,16)
07. ஏசாயா 46:10
08. நெகேமியாவோடு அலங்கம் கட்டும் பணியில் ஈடுபட்டவர்கள் (நெகேமியா 4:21)
09. அப்போஸ்தலனாகிய யோவான் - பத்மு தீவில் (வெளிப்படுத்தல் 1:17)
10. நட்சத்திரங்களைப் போல என்றைக்கும் உள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் (தானியேல் 12:3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# ஸ்தோத்திரம் செய்தலே தகும்!

❒ திருமதி. V.பிலிப்




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த பரபரப்பான உலகத்தில் எல்லோரும் பரபரப்புடன் எதை எதையோ தேடிக்கொண்டிருக்கும் இந் நாட்களில் நானும் நீங்களும் ஒரு காரியத்தைச் செய்யும்படியாக வேதாகமம் எங்களை வலியுறுத்துகின்றது.

**எபேசியர் 5:4 அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.**

எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். வாழ்க்கையில் ஏற்படுகிற கடினமான சூழ்நிலைகள், குழப்பமான சூழ்நிலைகள், குறைவுகள், இல்லாமைகள், உங்களைக் குறித்து மற்றவர்களுடைய புத்தியீனமான பேச்சுக்கள், பரியாசங்கள், ஏளனங்கள் எல்லாவற்றுக்காகவும் ஸ்தோத்திரம் செய்து பாருங்கள். காரியங்கள் மாறுதலாய் முடியும்.

ஸ்தோத்திரம் செய்வது என்பது நன்றி நிறைந்த உள்ளத்தோடு கூடிய தேவனை துதிக்கும் நிலை. அது உங்கள் வாழ்க்கையில் அவருடைய கிருபையைப் பெருகப்பண்ணும்.

**சங்கீதம் 34:1 கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.**

எக்காலத்திலும் – என்பது வாழ்வின் எல்லா நேரங்களிலும் நன்றி நிறைந்த இருதயத்தோடு அவரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

துதித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட இருதயங்களில் ஆண்டவர் பிரியமாய் இருக்கிறார். நாம் சமைக்கும் போது, வேலை செய்யும் போது, ஆடைகளை சுத்தம் செய்யும் போது, சந்தைக்குச் செல்லும் போது, பிள்ளைகளுடன் நேரம் செலவிடும் போது கூட ஸ்தோத்திரம் செய்ய பெரிய நேரம் தேவையில்லை. நன்றி நிறைந்த ஒரு உண்மையான இருதயம் போதும்.

**பிலிப்பியர் 4:6 நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.**

சில குடும்பங்கள் குழப்பங்களோடு, பிரச்சனைகளோடு பிரிகிற நிலையில் இருக்கும் போது நன்றி நிறைந்த இருதயத்தோடு உங்கள் குடும்பத்திற்காக, உங்கள் கணவனுக்காக, பிள்ளைகளுக்காக ஆண்டவர் பாதத்தில் இருந்து அனுதினமும் ஸ்தோத்திரம் செலுத்துங்கள். குடும்பம் ஒன்று சேர்வதைக் காண்பீர்கள். பாதைகள் பயங்கரமாய் இருந்தாலும், கண்ணீர் வழிந்தாலும் கர்த்தாவே நீர் நல்லவர் என்று சொல்லும் இருதயம் தேவனுக்கு மிகவும் பிரியமானது.

ஸ்தோத்திரம் செய்வது சாத்தியமற்ற காரியத்தை சாத்தியமாக்கும். வேதத்தில் தானியேல் என்ற தேவ மனுஷன் சூழ்நிலை எல்லாம் மாறுபட்ட போதும், குழப்பமான சூழ்நிலையிலும் உயிர் பறி போகபோகின்றது என்று எல்லோரும் எதிர்பார்த்து காத்திருந்த வேளையிலும் அவர் செய்த காரியம்:

**தானியேல் 6:10 தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, <u>ஸ்தோத்திரம் செலுத்தினான்.</u>**

அவர் அதை வழக்கமாக கொண்டிருந்தார்.

**தானியேல் 6:22 சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய <u>தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்;</u> அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான்.**

உணவு கொடுப்பவனையே உணவாக கொள்ளும் சிங்கங்களின் வாய் கட்டப்படுவது என்பது சாதாரண காரியமா? அது இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியமல்லவா? அது ஸ்தோத்திரம் செய்வதை தானியேல் வழக்கமாக கொண்டிருந்தபடியால் சாத்தியமானது.

சகோதரிகளே, உங்கள் வாழ்க்கையிலும் உங்களுக்கு எதிராக பேசும் நாவுகள், உங்களைக் குற்றப்படுத்தும் நாவுகள், உங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தீங்கு செய்ய விரைந்தோடும் கால்கள், உங்களை வீழ்த்தும்படியாக போடப்படும் சதித்திட்டங்கள், எதுவாக இருந்தாலும் எல்லாவற்றையும் கட்டிப் போட ஆண்டவரால் முடியும். ஸ்தோத்திரம் செய்வதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். தேவையற்ற காரியங்களுக்கும், வீண் கவலைகளுக்கும் செலவிடும் நேரத்தை ஸ்தோத்திரம் செய்வதற்கு செலவிடுங்கள். தேவன் உங்களுக்காக யுத்தம் செய்வதைக் காண்பீர்கள்.

*ஒரு முறை ஜோர்ஜ் முல்லர் தான் பராமரிக்கும் பிள்ளைகளுக்கு ஆகாரம் இல்லாமையால் என்ன செய்வதென்று தெரியாமல் பிள்ளைகளை அமர்த்தி சாப்பாட்டு தட்டுக்களை எல்லோருக்கும் முன்பாக வைத்து இன்றைக்கு நீர் தரப்போகின்ற சாப்பாட்டிற்காக ஸ்தோத்திரம் என்று சொல்லி முடிக்கும் நேரத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. திறந்த போது பேக்கரி நடத்தும் ஒருவர் வாசலில் நின்று, இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. பணிஸ் செய்து அந்த பிள்ளைகளுக்கு கொடுக்கும்படி ஆண்டவர் சொன்னார். இரண்டு மணிக்கு எழுந்து பணிஸ் தயாரித்து இப்போது கொண்டு வந்தேன் என்று சொன்னாராம்.*

'ஸ்தோத்திரம் செய்வது என்பது காரியங்களை மாறுதலாய் முடியப்பண்ணும்; சாத்தியமற்றதை சாத்தியமாக்கும்.' இதுவரைக்கும் குறை சொல்வதையும், முறுமுறுப்புக்களையும் பழக்கமாக கொண்டிருந்து ஸ்தோத்திரம் செய்யும் பழக்கம் உங்கள் வாழ்க்கையில் இல்லையென்றால் இன்றைக்கே அதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். ஆண்டவருடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கரம் உங்கள் வாழ்க்கையில் செயற்படுவதைக் காண்பீர்கள்.

'அன்பான சகோதரிகளே, ஸ்தோத்திரம் செய்வதை சாதாரணமாக நினைக்க வேண்டாம்' ஸ்தோத்திரம் செய்யும் போது நம் உள்ளம் இலகுவாகின்றது, சமாதானம் பெறுகின்றது, விசுவாசம் வலுப்படுத்தப்படுகின்றது, அவருடைய பிரசன்னம்நம்மை ஆட்கொள்கின்றது. நாம் ஸ்தோத்தரிக்கும் போது நம் வாழ்க்கை மாறுகின்றது. ஆகவே எப்போதும் ஸ்தோத்திரம் செய்வதே நமக்கு தகும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






## ரிச்சர்ட் ஆலன்
## 1760 - 1831

### நிற வேற்றுமை வேண்டாம்...

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை, ஆண்டவரை ஆராதிக்கும் வாஞ்சையுடன் ரிச்சர்ட் ஆலனும், அவரது நண்பர் அப்சலோம் ஜோன்சும், உடன் ஆப்பிரிக்க கறுப்பு இன மக்களுமாக இணைந்து, அந்த ஆலயத்திற்குள் நுழைந்தனர்.

முழங்கால் படியிட்டு ஆண்டவரை நோக்கி விண்ணப்பம் செய்து கொண்டிருக்கும் வேளையில் திடீரென சிலர் அவர்களை முரட்டுத்தனமாய் பிடித்து வெளியே தள்ளினர். கறுப்பு இன மக்கள், அவ்வாலயத்தில் தொழுது கொள்ள அனுமதி அளிக்கப்படவில்லை. மிகுந்த மன வேதனையுடன் அவர்கள் அங்கிருந்து கடந்து சென்றனர்.

ரிச்சர்ட் ஆலன் ஒரு அடிமையின் பெற்றோருக்கு மகனாக பிறந்தார். இவர் பெற்றோரும், அவர்களது நான்கு குழந்தைகளும் டெலவர் விவசாயிக்கு அடிமைகளாக விற்கப்பட்டிருந்தனர். சிறுவயதிலேயே மிகவும் துடிதுடிப்பாகவும், உற்சாகமாகவும் காணப்பட்ட ஆலன், எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொண்டார். இதனால், வேதாகமத்தை படிக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. இவரின் எஜமான் நல்ல மனிதராக காணப்பட்டபடியால், திருச்சபைக்கு செல்வதை தடைசெய்யவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1786ஆம் ஆண்டு இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிறருக்கு அறிவிக்கவும், தன் வீட்டிலேயே கூட்டங்கள் நடத்தவும், அவருடைய எஜமான் தன் வீட்டை ஆலனுக்கு திறந்து கொடுத்தார். அடிமைத்தனத்திலிருந்து ஆலனையும் அவர் குடும்பத்தினரையும் விடுதலை செய்தார்.

விடுதலை பெற்ற ஆலன், 1815ஆம் ஆண்டிலிருந்து 1830ஆம் ஆண்டு வரை விடுதலையான கறுப்பர்களின் தலைவராக செயற்பட்டார். ஆப்பிரிக்கன் சபையை உருவாக்கினார். தன்னை போன்ற கறுப்பு இன மக்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைக்க, தன்னை மிஷனெரியாக அர்ப்பணித்தார். ஆப்பிரிக்க நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, அடிமைகளின் வாழ்வில், கிறிஸ்து தரும் விடுதலை வாழ்வை எடுத்துரைத்தார். 1816ஆம் ஆண்டு தாம் உருவாக்கிய திருச்சபையின் முதல் பேராயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிமையாக பிறந்து, அடிமைகளுக்காகவே வாழ்ந்த இவர், அடிமைகளின் விடிவெள்ளி.

**அன்பரே! அடக்கு முறைகளை களைய துணிந்து செயற்படுவீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நீ பிரசங்கிக்கிறவைகளை நீயே செய்யவில்லையென்றால் நீ செய்கிறவைகளை இன்னொருவர் பிரசங்கிப்பார்.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 26**

# வில்லியம் ஹண்டர் 1536 - 1555



## நிலைத்து நில்

வில்லியம் ஹண்டருக்கு வயது 19. துள்ளித்திரியும் வாலிபப் பருவம். ஆனால் கை கால்கள் கட்டப்பட்டவனாக மக்கள் வேடிக்கை பார்க்கும் படியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தான்.

நீண்ட அங்கி அணிந்த ஒருவர் வந்தார். வில்லியத்தை மிகுந்த கோபத்துடன் முறைத்துப் பார்த்தார். அவருடைய உருவம் பார்ப்பதற்கு மிகுந்த பயமாயிருந்தது. சிங்கத்தின் கர்ஜனை போலக் கர்ஜிக்க ஆரம்பித்தார். இயேசுவை மறுதலித்துவிடு, இல்லையானால் எரிந்து சாம்பலாகிவிடுவாய்.

ஹண்டர் புன்முறுவல் செய்தான். தன்னுள் இயேசு இருப்பதை எண்ணி தைரியம் கொண்டான். கிறிஸ்துவுக்காக எத்துன்பத்தையும் ஏற்றுக் கொள்ள தயாரானான். இங்கிலாந்தை ஆட்சி செய்த மேரி அரசியின் சட்டப்படி திருவிருந்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பயன்படுத்தப்படும் திராட்சை ரசமும் அப்பமும் ஹண்டரின் முன் வைக்கப்பட்டன. அவைகளின் முன் விழுந்து வணங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டான்.

ஆனால் ஹண்டரோ இயேசுவை மட்டுமே வணங்குவதாகவும் வேறே பொருட்களை வணங்குவதில்லை என்றான். பெற்றோர் அவனை நல்லொழுக் கத்திலும் விசுவாசத்திலும் வளர்ந்திருந்ததால் தன் பக்தியில் உறுதியாக காணப்பட்டான். எனவே 9மாதங்கள் கடும் சித்திரவதைகளைச் சிறைச்சாலையில் அனுபவித்தான். எனினும் அவன் விசுவாசம் எள்ளளவும் குறைந்து போகவில்லை.

இறுதியாக வில்லியத்தை சுட்டெரிக்கும் நாள் வந்தது. இரத்த சாட்சியாக மரிப்பதற்குச் சிறிதும் அஞ்சாமல் முகமலர்ச்சியுடனும், தைரியத்துடனும் கம்பத்தை நோக்கிச் சென்றான். கொடூரர்கள் அவன் உடலை தீ வைக்க ஆரம்பித்தனர். வில்லியம் வானத்தை அண்ணாந்து பார்த்து 'தேவனுடைய குமாரனே என்மேல் பிரகாசியும்' என்று கூறும் வேளையிலே அவன் உயிர் மேகங்களுடனே மேலெழும்பியது.

**அன்பரே! விக்கிரகங்களை வணங்கும் மக்களைக் குறித்து உங்கள் பாரம் என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** உலகம் தன் கால்களில் நின்று வெற்றியைத் தேட முயற்சிக்கிறது. உண்மை கிறிஸ்தவன் தன் முழங்காலில் நின்று அதைப் பெறுகிறான்.

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 27**

# படித்ததில் சில...

சில நேரங்களில், நீங்கள் எடுக்கக்கூடிய உறுதியான முடிவு என்பது வெறுமனே விலகிச் செல்வதுதான். விலகிச் செல்வது பலவீனம் அல்ல; அது ஞானமாய் செயல்படுவதாகும். உங்கள் ஆத்துமாவைச் சோர்வடையச் செய்யும். காரியங்களிலிருந்து நீங்கள் விலகிச் செல்லும் ஒவ்வொரு அடியும், உங்களை அமைதி, தெளிவு மற்றும் வாழ்வின் நோக்கத்தை நோக்கி மேலும் நெருக்கமாக அழைத்துச் செல்லும். பாவத்தை எதிர் கொண்ட போது சோதனை யிலிருந்து தப்பி ஓடிய யோசேப்பை வேதாகமம் நமக்கு நினைவூட்டுகிறது. அந்த நேரத்தில் அது அவருக்கு இழப்பை ஏற்படுத்திய போதிலும், வசதியை விட நேர்மையை அவர் தேர்ந்தெடுத்தது, அவரை இன்னும் ஒரு மேலான ஒன்றிற்கு ஆயத்தப்படுத்தியது.

அன்பானவர்களே, அது போலவே, எதிர்மறை எண்ணங்கள், நச்சுத் தன்மையுள்ள மற்றும் தீங்கு விளைவிக்கும் பழக்கவழக்கங்களிலிருந்து விலகி இருங்கள். உங்கள் இருதயத்தைக் காத்து, உங்கள் எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்கள் முன்னேற்றம் மெதுவாக இருப்பதாகத் தோன்றினாலும் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லுங்கள். எளிதானதைவிட சரியானதைத் தேர்ந்தெடுப்பவர்களை தேவன் கனம் பண்ணுகிறார். இன்று நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள், வலிமையான சுதந்திரமான மற்றும் அதிக நோக்கமுள்ள ஒரு நாளை உருவாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




❐ போதகர் ஜோஹறணன் டேவிஸ் பிலிப்,
தலைவர்/தலைமைப் போதகர்,
சீயோன் தேவாலயம் – இலங்கை.




ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனல் வாசகர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆண்டவருடைய மிகப் பெரிதான கிருபையினால் இந்த 2026ஆவது ஆண்டில் நான்கு மாதங்களை கடந்து ஐந்தாவது மாதத்திற்குள் பிரவேசிக்க ஆண்டவர் நமக்கு கிருபை புரிந்திருக்கிறார்.

**லூக்கா 18:8b ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சர்வலோக ஆண்டவர் மனித வடிவில் இப் பூமிக்கு வந்த போது நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்து நமக்காக பாடுபட்டு – மரித்து – அடக்கம் பண்ணப்பட்டு பின்பு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து பரத்திற்குச் சென்றார். அவர் மீண்டும் தன்னுடைய பிள்ளைகளை தன்னுடன் அழைத்துச் செல்ல வரப்போகிற காலங்கள் மிக அண்மித்துக் கொண்டிருக்கிறது. அவ்விதமாக அவர் வரும் நாளில் இந்த பூமியில் விசுவாசம் இருக்குமோ? என்ற ஓர் அங்கலாய்ப்பின் வார்த்தையே மேற்குறிப்பட்ட வசனத்தில் காணப்படுகின்றது.

**லூக்கா 18:1 சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்:**

சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகிற ஒரு உவமையே இயேசு கிறிஸ்து இவ் அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார். இன்றைக்கு பலர் ஜெபிப்பதில் சோர்ந்து போகின்றோம். எதிர்பார்க்கும் பதில்களும் முடிவுகளும் தாமதமாகும் போது அல்லது கிடைக்காமல் போகும் போது ஜெபிப்பதில் சோர்வு நமக்குள் ஏற்படுகின்றது. ஆனாலும் கிறிஸ்தவர்களாக பலவிதமான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலமைகளிலும் தொடர்ந்து சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும் என்பதனை இவ் உவமை தெளிவாக நமக்கு கற்றுக் கொடுகின்றது.

அப்படிப்பட்ட ஒரு தெளிவை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திய பின்னர் மேற்குறிப்பிட்ட ஏக்கமான வசனமாக:

**லூக்கா 18:8b ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்.**

இன்று நாம் மிகப்பயங்கரமான கொடிய இருள் நிறைந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்பேர்ப்பட்ட காலகட்டங்களில் நாம் விசுவாசத்தில் நிலைத்து நிற்பது என்பது அல்லது உறுதியாக நிற்பது என்பது மிகவும் கடினமான ஒன்றாக மாறிவிடுகின்றது. எனவே இதற்குள் நாம் சிக்குப்பட்டு, பயங்கரமான உலகத்திற்குள் தடுமாறி விழுந்துவிடாதபடி விசுவாசத்தில் பலமுள்ள அல்லது உறுதியான வாழ்வு வாழ நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

இதனையே ஆண்டவர் நம்மிடம் இக் காலங்களில் எதிர்பார்க்கின்றார். ஆகவே ஆண்டவருடைய இவ் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக நாம் விசுவாசத்தில் நிலைத்து நிற்பதற்கு அல்லது திடனுள்ள கிறிஸ்தவ ஜீவியம் வாழ ஆண்டவருடைய வார்த்தையிலிருந்து சில விடயங்களை முன்வைக்கின்றேன்.

## I. தன்னைக் கட்டியெழுப்புகிறவனாக காணப்பட வேண்டும்

**1சாமுவேல் 30:1-6 (1.) தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**நாளிலே, சில்லாகுக்கு வந்து சேருகிற தற்குள்ளே, அமலேக்கியர் தென்புறத்துச் சீமையின்மேலும் சில்லாக்கின் மேலும் விழுந்து, சில்லாகைக் கொள்ளையடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து, 2. அதிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையும் சிறைப்பிடித்து, ஒருவரையும் கொன்றுபோடாமல், அவர்களைப் பிடித்துக் கொண்டு, தங்கள் வழியே போய் விட்டார்கள். 3. தாவீதும் அவன் மனுஷரும் அந்தப் பட்டணத்திற்கு வந்தபோது, இதோ, அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், தங்கள் மனைவிகளும் தங்கள் குமாரரும் தங்கள் குமாரத்திகளும் சிறைப்பிடித்துக் கொண்டுபோகப்பட்டார்கள் என்றும் கண்டார்கள். 4. அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள். 5. தாவீதின் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊரான அகினோவாமும், கர்மேல் ஊரான நாபாலின் மனைவியாயிருந்த அபிகாயிலும், சிறைப்பிடித்துக்கொண்டு போகப்பட்டார்கள். 6. தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்.**

திடமான அல்லது பலமான ஒரு கிறிஸ்தவ விசுவாச ஜீவியம் வாழவேண்டுமென்றால் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைக் கர்த்தருக்குள் கட்டியெழுப்ப வேண்டும். அல்லது திடப்படுத்தப்பட்ட வாழ்வு வாழ பிரயாசப்பட வேண்டும். ஆனால் இன்றைக்கு பல எதிர்மறையான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கிற போது சோர்ந்து, துவண்டு, பின்மாற்றமான நிலமைக்கு அனேக கிறிஸ்தவர்கள் தள்ளப்படுகின்றார்கள்.

மேற்குறிப்பட்ட சம்பவத்தில் தாவீதோடு இருந்த அத்தனை பேரும் மிகவும் கடினமான, பயங்கரமான சூழலுக்கு முகங்கொடுக்கின்றனர். அவனோடு இருக்கிற அத்தனை பேரும் இப்படிப்பட்ட இழப்பை, அழிவை, நெருக்கத்தை சந்தித்தபோது அதற்கு எப்படி முகங்கொடுத்தார்கள் என்றால்; தங்கள் தலைவனாகிய தாவீதிற்கு எதிராக கல்லைத் தூக்கி அவனுக்கு எறிய முற்பட்டார்கள். தாவீது ஒரு குற்றவாளி என்று நினைத்து அவனைக் கொல்ல நினைக்கிறார்கள்.

இது தான் அவர்கள் முகங்கொடுத்த சூழலில் அவர்கள் காண்பித்த வெளிப்பாடு. தாவீதும் இதே சூழலுக்கு முகங்கொடுக்கின்றார். தாவீது தனிமையில் இருந்தார், அவரை ஆதரித்தவர்கள் கூட அவருக்கு எதிராக மாறினார்கள். அவ் வேளையில் அவருடைய வெளிப்பாடு எப்படிப்பட்டதாக இருந்தது; அவர் கல்லைத்தூக்க முற்படவில்லை, அவர்களுக்கு எதிராக முறுமுறுக்கவில்லை. மாறாக ‘அவர் கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டார்’ இதன் அர்த்தம்: தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைத்தார், தேவன் தனக்கு முன்பு செய்த நன்மைகளை நினைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தாவீதின் இவ் உதாரணத்தை இன்றைக்கு கிறிஸ்தவர்களாகிய நாமும் கற்றுக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

இன்று நாம் முகங்கொடுக்கிற பாதகமான நிலமைகளில் உலகத்து மனிதர்களைப் போல கற்களைத் தூக்கும் வெளிப்பாடுகளைக் காண்பிக் காது தாவீதைப் போல ஆண்டவருக் குள் நம்மைத் திடப்படுத்த வேண்டும். **பிரச்சினை இல்லாத வாழ்க்கை யல்ல முக்கியம்: பிரச்சினையிலும் நாம் தேவனில் நிலைத்திருக்கும் இருதயம் தான் மிக முக்கியம்.**

## 02. ஆவிக்குரிய நிறைவை எதிர்பார்ப்பான்

**மத்தேயு 4:1-4 (1.) அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப் படுவதற்கு ஆவியானவராலே வனாந் தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். 2. அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. 3. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். 4. அவர் பிரதி யுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயினி ருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த் தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.**

ஒரு பலமுள்ள அல்லது திடமுள்ள கிறிஸ்தவன் எப்பொழு தும் தன்னுடைய வாழ்வில் மற்றைய விடயங்களைவிட ஆவிக்குரிய விடயங்களுக்கு முதலிடத்தையும் முக்கியத்துவத்தையும் கொடுப்பான். மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் எடுத்த பிற்பாடு பிசாசினாலே சோதிக்கப்பட்ட வனாந்திரத்திற்கு கொண்டு போகப்பட் டார். அவ் வேளையிலே அவர் நாற்பது நாட்கள் உபவாசத்திலே இருக்கிறார். அந்த சூழ்நிலையில் அவருக்கு பசி யுண்டாயிற்று என்பதனை அவதானிக் கிறோம்.

ஒவ்வொரு மனுஷனுக்கும் உணவு என்பது மிக முக்கியமானது. இது மனிதர்களின் அடிப்படைத் தேவை களில் ஒன்று. அது அவசியம் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று. *'பசி வந்தால் பத்தும் பறந்து போம்'* என்ற பழ மொழி உண்டு என்பதை அறிவோம். ஆகவே இயேசு கிறிஸ்துவிற்கு நாற்பது நாட்கள் உபவாசம் இருந்த சூழலிலே எந்த அளவு வீரியமாக அவருடைய பசி இருந்திருக்க முடியும் என்பதை நாம் ஊகித்துப் பார்க்க வேண்டும். இதற்கு தீர்வாக அங்கு காணப்பட்ட கல்லை அப்பமாக மாற்றும்படி பிசாசு அவருக்கு சவால்விட்டது. இயேசு கிறிஸ்து தன்னிடமிருக்கும் வல்லமையால் அதனை மாற்றியிருக்க முடியும். ஆனால் பிசாசை ஜெயிக்க அவர் தேவனுடைய வார்த்தையால் பதிலளித்து ஜெயமெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மிகப்பசியான சூழலிலும் அது அடிப்படை தேவை என்பதையும் பொருட்படுத்தாமல் இயேசு கிறிஸ்து தெளிவாக இச் சவாலில் கூறுகின்றார்:

**மத்தேயு 4:4 அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.**

ஆகவே தேவ பிள்ளைகளே நமது வாழ்விலும் அடிப்படைத் தேவைகள் இருக்கட்டும் அது முக்கியமானது தான் ஆனாலும் பலமுள்ள ஒரு கிறிஸ்தவன் ஆவிக்குரிய வாழ்க்கையை பலமாக கொண்டு செல்ல தேவனுடைய வசனம் என்னும் ஆவிக்குரிய உணவை அன்றாடம் உட்கொள்ள வேண்டும். அவசரமான உலகத்தில் ஆண்டவருடைய வார்த்தைக்கு நேரம் ஒதுக்க வேண்டும். அதை தியானித்து வாழ்வின் கடினமான நேரங்களில் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

## 03. பாவத்தை தள்ளிவிடு

**எபிரெயர் 12:1 ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.**

*ஒரு மலைக் கிராமத்தில் ஈசாக் என்ற இளைஞன் வாழ்ந்தான். அவன் உண்மையைத் தேடும் மனம் கொண்டவன். "எது நன்மை? எது பாவம்?" என்று அடிக்கடி சிந்திப்பான்.*

*ஒருநாள், அவன் ஒரு ஞானியிடம் சென்றான்.*

*"ஆசிரியரே, நான் பாவத்தோடு எப்போதும் போராடிக் கொண்டே இருக்கிறேன். சில சமயம் ஜெயிக்கிறேன்... பல சமயம் தோற்கிறேன். என்ன செய்வது?" என்று கேட்டான்.*

*ஞானி சிரித்தார். அவனை ஒரு மலைப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.*

*அங்கு இரண்டு வழிகள் இருந்தது — ஒரு பாதை அழகாக, மலர்களால் நிறைந்திருந்தது. இன்னொரு பாதை கல்லும், முள்ளும் நிறைந்தது.*

*"அந்த அழகான பாதையில் நடந்து செல்," என்றார் ஞானி.*

*ஈசாக் அந்த பாதையில் நடக்கத் தொடங்கினான். ஆரம்பத்தில் எல்லாம் அழகாக இருந்தது. ஆனால் சொற்ப தூரம் சென்றபின், அந்த பாதை மெதுவாக கீழே இறங்க ஆரம்பித்தது. கால் வழுக்கத் தொடங்கியது. கீழே ஆழமான பள்ளம் இருந்தது!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவன் பயந்து ஓடிவந்து மீண்டும் ஞானியிடம் சேர்ந்தான்.

ஞானி கேட்டார்:

"ஏன் திரும்பி வந்தாய்?"

ஈசாக் சொன்னான்:

"ஆசிரியரே, ஆரம்பத்தில் அழகாக இருந்தது. ஆனால் அது என்னை அழிவுக்கு கொண்டு போகும் பாதை என்று புரிந்ததும் நான் ஓடிவிட்டேன்."

அப்போது ஞானி மெதுவாகச் சொன்னார்:

"அதுவே பாவம். அது முதலில் அழகாகத் தெரியும். ஆசையாக அழைக்கும். ஆனால் அதன் முடிவு அழிவு. அதிலிருந்து ஓடுவது பயம் அல்ல... ஞானம்."

பிறகு அவர் கல்லும் முள்ளும் நிறைந்த பாதையை காட்டினார்:

"இது கடினம். ஆனால் இது மேலே கொண்டு போகும். வாழ்க்கை, சுத்தம், சமாதானம்— அவை இங்கே கிடைக்கும்."

ஈசாக் அந்த நாளில் ஒரு உண்மையைப் புரிந்தான்:

பாவத்தோடு நின்று போராடுவதற்குப் பதில், அதிலிருந்து ஓடுவது தான் உண்மையான வெற்றி.

அவன் வாழ்க்கை மாறியது. இனி அவன் சோதனைகளை எதிர்த்து நிற்கவில்லை — அவை வந்தவுடன் அவன் திசை மாற்றி ஓடினான்.

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களிடத்தில் பாவம் மிகவும் அன்னியோன்னியமாக பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. பாவம் செய்யாதிருப்பதைவிட பாவம் செய்வதே இலகு என்ற நிலைக்கு மனிதர்கள் தள்ளப்படுகின்றார்கள். இந்த சூழ் நிலையில் பரிசுத்த வேதம் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது: நம்மைச் சுற்றி நெருக்குகிற பாவத்தை முற்றுமுழுதாக எம்மைவிட்டு அகற்ற வேண்டும்.

பல காலங்களுக்கு முன்பதாக பாவம் என்பது மனிதர்களாலே வெட்கரமான ஒன்றாக பார்க்கப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் மனிதர்கள் பாவம் செய்வதை வெளிப்படையாக காண முடியாது. ஆனால் இப்போது இது தலைகீழாக மாறியிருக்கின்றது.

இன்றைக்கு ஆண்டவரை அறிந்தவர்கள் கூட பாவத்தை பெரிது படுத்துவதில்லை. தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்போர் அல்லது ஆராதனையை வழிநடத்துகிறவர்கள் கூட தாங்கள் துணிகரமான பாவத்தில் வாழ்ந்து கொண்டும் அவற்றை விட்டு விடாமல், சீர்செய்யாமல் தொடர்ந்தும் அதில் ஈடுபாடு கொண்டவர்களாக காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இதன் விளைவாக அவர்களைப் பின்பற்றி அனேக கிறிஸ்தவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாவத்தை வெறுத்துவிடுவதில்லை, பெரிதுபடுத்துவதுமில்லை.

ஆனால் இந்த பாவம் முற்று முழுதாக அகற்றப்பட வேண்டிய ஒன்று. அப்படி அகற்றப்பட்டால் அல்லது நம்மை அண்டவிடாது பாதுகாத்தாலே பலமுள்ள உறுதியான கிறிஸ்தவர் களாக நாம் திகழ முடியும்.

## 04. ஆசீர்வாத வாய்க்காலாக காணப்படுவான்

**மாற்கு 2:3-5 (3.) அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார் கள்; 4. ஜனக்கூட்டத்தினிமித்தம் அவருக்குச் சமீபமாய்ச் சேரக்கூடாமல், அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கி, திமிர்வாதக் காரன் கிடக்கிற படுக்கையை இறக்கி னார்கள். 5. இயேசு அவர்கள் விசுவா சத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.**

ஒரு பலமுள்ள அல்லது திட முள்ள கிறிஸ்தவனாக திகழவேண்டு மென்றால் நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் வாய்க்கால்களாக காணப்பட வேண்டும். எங்கள் மூலமாக மற்றவர்கள் நன்மை அடைய வேண்டும். எங்கள் மூலம் மற்றவர்கள் முன்னேற வேண்டும். எங்கள் மூலம் மற்றவர்கள் சிறப்பான வாழ்வு வாழவேண்டும்.

இந்த சம்பவத்திலே இயேசுவை சந்திக்க வேண்டிய தேவை அல்லது இயேசுவிடத்தில் நன்மை பெறவேண்டிய தேவை அந்த திமிர்வாதக்காரனுக்கு மட்டுமே. ஆனால் அவன் தனி மனித னாக தன்னுடைய தேவையை அவனால் பூர்த்தி செய்ய இயலாத சூழல். ஏனென்றால் அவன் கட்டில் கிடையாக கிடக்கின்றான். அந்த நிலமையில் அவனை இயேசுவினிடத்தில் அழைத்துச் செல்ல நான்கு பேர் முன்வருகின்றார் கள்.

நான்கு பேரும் அவனைக் கொண்டு வந்ததும் ஜனக்கூட்டத்தின் நிமித்தமாக இயேசுவை அவர்களால் நெருங்க முடியவில்லை. அவர்களு டைய பிரயாசத்திற்கு தக்கபலன் கிடைக்கவில்லை. அச்சூழலில் அவர் கள் தங்கள் நோக்கத்தைக் கைவிடா மல் இன்னும் அதிகமாய் பிரயாசப் படுகின்றார்கள். அந்த திமிர்வாதக் காரனை தூக்கிக் கொண்டு அவர்கள் வீட்டிற்கு மேல் ஏறுகின்றார்கள். இது சாதாரண விடயம் அல்ல.

கூரையைப் பிரித்து அவனைக் கயிற்றினால் இறக்குகின்றார்கள். முழுப் பாரத்தையும் தாங்கிப் பிடித்ததி னால் அவர்கள் உடலிலே பல வலிக ளையும் வேதனைகளையும் அனுபவித் திருக்க வாய்ப்புண்டு. இந்த வலிகளும் வேதனைகளும் தங்கள் சொந்த வாழ்க்கைக்கு ஆசீர்வாதத்தையோ முன்னேற்றத்தையோ கொடுக்கமாட் டாது என்பதனை அறிந்திருந்தும் ஒரு தனி மனிதனுக்காக அவர்கள் தங் களைத் தியாகம் பண்ணினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த சூழலிலே இயேசு திமிர்வாதக் காரனை சுகப்படுத்துகின்றார். ஆனால் சுகப்படுத்த முன்னர் மேற்குறிப்பிட்ட வசனம் மிகத் தெளிவாக கூறுகின்றது: **மாற்கு 2:5 இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.** என்பதாக.

இங்கே யாருடைய விசுவாசத்தை இயேசு கண்டார்? வலிகளையும் வேதனைகளையும் தாங்கி திமிர்வாதக் காரனை சுமந்து கொண்டு கூரைக்கு மேலே நிற்கின்ற அந்த நான்கு மனிதர் களுடைய விசுவாசத்தையுமே இயேசு கண்டு அந்த திமிர்வாதக்காரனுக்கு விடுதலையைக் கொடுத்தார்.

இதே போல நாமும் மற்றவர் கள் நம் மூலமாக ஆசீர்வதிக்கப்பட வாய்க்கால்களாக திகழ வேண்டும்.

ஆகவே எனக்கு அருமையான வர்களே கர்த்தருடைய வருகை மிக சமீபம். அவர் வரும் போது பூமியிலே விசுவாசத்தை காண்பாரோ என்ற அவருடைய ஏக்கம்! அந்த ஏக்கம் நீக்கப்பட வேண்டுமென்றால் நாம் ஒரு பலமுள்ள திடமுள்ள விசுவாசத்தில் நிலைத்து நிற்கும் மனிதர்களாக நம்மை அர்ப்பணித்தாலே அது கைகூடும்.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**

---

(பக்தர்கள் பயிலகம் - 32ஆம் பக்க தொடர்ச்சி)

இவையெல்லாவற்றையும் கூறிவிட்டு; ஆனால் இவைகளையெல்லாம் நீ கடைப்பிடிக்கிறவன் அல்ல. எனவே கிரேக்கரின் நிலைதான் உங்களின் நிலையும் எனக் காண்பிக்கிறார் பவுல்.

**ரோமர் 2:21-24 (21.) இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவுசெய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவுசெய்யலாமா? 22. விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? 23. நியாயப்பிரமாணத்தைக்குறித்து மேன்மைபாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறிநடந்து, தேவனைக்கனவீனம்பண்ணலாமா? 24. எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே.**

விடுதலை பெற்றவர்களுக்கு உலகத்தின் வாழ்க்கை முறையைவிட உயர்ந்த வாழ்க்கை முறை தேவை.

தொடரும்...

---

**(கர்த்தர்) அவர் மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். சங்கீதம் 37:5**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




❒ போதகர் வேதநாயகம் மகாராஜா

# ரோமர் நிரூபம் ஓர் சுருக்க விளக்கம்

## யூதர்களின் பாவம்

யூதனாயினும் புறஜாதியாராகிலும் பொல்லாங்கு செய்யும் போது உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். (ரோமர் 2:9)

யூதரிலும் கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் உண்டாகும். (ரோமர் 2:10)

யூதரையும், கிரேக்கரையும் ஒரே இடத்துக்குக் கொண்டு வருகிறார் தேவன். ஏனெனில் அவரிடம் பட்சபாதம் இல்லை. (ரோமர் 2:11)

இன, மொழி, பிரதேச ரீதியாக தேவன் எந்த மனிதனையும் பார்ப்பதில்லை. நியாயப்பிரமாணமுள்ளவர்களையும் நியாயப்பிரமாணம் இல்லாதவர்களைம் எப்படி நியாயந்தீர்க்கிறார். ஒருவன் நியாயப்பிரமாணம் இல்லாமல் கெட்டுப் போகிறான். மற்றவன் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவனாயிருந்து பாவஞ்செய் வதால் அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலேயே ஆக்கினைத்தீர்ப்படைகிறார் கள். (ரோமர் 2:12)

புறஜாதியாரின் சுபாவம், மனச்சாட்சி, சிந்தனை அவர்களுக்கு நன்மை தீமையை வகையறுத்துக் காட்டும்.

**ரோமர் 2:13-15 (13.) நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான் களாக்கப்படுவார்கள். (14.) அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தாங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். ( 15.) அவர்களுடைய மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிற தென்று காண்பிக்கிறார்கள்.**

* மனச்சாட்சி என்பது சரி - பிழை என்ற உணர்வாகும்.
* மனச்சாட்சி மனிதனின் ஆவியின் ஓர் பகுதியாகும். அத்துடன் இது மிருகங்களிடம் இருந்து மனிதனை வேறுபிரித்து தேவனுடைய சாயலாகக் காண்பிக்கிறது.
* நாம் தங்கியிருக்க வேண்டிய வழிகாட்டியாக இது எமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த மனச்சாட்சி தேவனுடைய வார்த்தையினால் வழிநடத்தப்பட வேண்டும்.

இரண்டு பேரையும் ஒப்பிட்டுப் பேசியபின் யூதர்களுக்கு நேரடியாகப் பேசுகிறார். அதென்னவென்றால்:

**ரோமர் 2:17-20 (17.) நீ யூதனென்று பெயர்பெற்று, நியாயப்பிரமாணத்தின் மேல் பற்றுதலாயிருந்து, தேவனைக்குறித்து மேன்மைபாராட்டி, 18. நியாயப்பிர மாணத்தினால் உபதேசிக்கப்பட்டவனாய், அவருடைய சித்தத்தை அறிந்து, நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கிறாயே. 19. நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டி யாகவும்., அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமாகவும், 20. பேதைகளுக்குப் போதகனாகவும், குழந்தைகளுக்கு உபாத்தியாயனாகவும், நியாயப்பிரமாணத் தின் அறிவையும் சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவனாகவும் எண்ணுகிறாயே.**

அவர்கள்:

- தம்மை யூதர்கள் என அழைத்தனர்
- நியாயப்பிரமாணத்தின் மேல் பற்றுதலாயிருந்தனர்
- தேவனைக் குறித்து மேன்மை பாராட்டினார்
- தேவனுடைய சித்தத்தை அறிந்திருந்தனர்
- நன்மை தீமை இன்னதென வகையறுத்துக் கூறுகிறவர்கள் (எதைச் செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்)
- நியாயப்பிரமாணத்தினால் உபதேசிக்கப்பட்டனர்
- குருடருக்கு வழிகாட்டியாக தங்களைப் பார்த்தனர்
- அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமாக தங்களை எண்ணினர்
- பேதைகளுக்குப் போதகனாகவும்
- குழந்தைகளுக்கு உபாத்தியனாகவும்
- நியாயப்பிரமாணத்தின் அறிவையும் சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவனாகவும்

யூதர்கள் தங்களை எண்ணினார்கள்.

(30ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஆண்களிடம் பேசக்கூடாதா?

**வேதப்பகுதி: 1தீமோத்தேயு 2:8-15**

வேதராஜ் தன்னுடைய மகள் ஆண்களோடு பேசுவதையும் பழகுவதையும் குறித்து எதுவும் சொல்லமாட்டார்.

தேவநேசன் தன் மகள் எந்த ஆண்களிடமும் பேசவோ பழகவோ கூடாது என்று கண்டிப்பாக சொல்லி வைத்திருக்கிறா்.

சாமுவேல் ராஜா தன் மகளிடம் அவசியமான காரியங்களில் ஆண்களிடம் பேசுவது தவறு அல்ல. ஆனாலும் பெண் பிள்ளைகளிடம் மட்டுமே நீ நட்பு கொண்டு பழகவேண்டும் என்று கூறியுள்ளார்.

இதில் எந்த தந்தையின் கருத்து சரி என்று நீ நினைக்கிறாய்? சிறு வயதிலிருந்தே எதிர் பாலினத்தவரோடு அதிகமாகப் பழகுவது போகப் போக பிரச்சினையாக மாறும். ஆண் களுக்கு பழகத்தக்க நண்பர்கள் ஆண்களே. பெண்களுக்கு பழகத்தக்க நண்பர்கள் பெண் களே. ஆனால் அவசியமான காரியங்களில் ஆண்களோடு பேசுவது தவறல்ல என்ற சாமுவேல் ராஜின் கருத்து சரியானது.

**சிந்தனைக்கு:-**

**பாய் பிரண்ட், கேர்ள் பிரண்ட் பழக்க வழக்கங்கள் ஒழுக்க கேடுகளுக்கு வழிவகுக்கும்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் - ஜுன் 20

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

### Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 1000.00 |
| இந்தியா (India) | 2000.00 |
| கனடா. அமெரிக்கா (Canada & USA) | 3000.00 |
| சிங்கப்பூர். மலேசியா (Singapore & Malaysia) | 2100.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 2100.00 |
| ஜேர்மனி. இங்கிலாந்து. இத்தாலி. அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 2100.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:........................................

முகவரி:......................................

..................................................

..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் தந்த வைரங்கள்...

சிலுவை இல்லாமல்
பின்பற்றுதல்
இல்லை; இயேசுவை
உண்மையாக
பின்பற்ற
வழிசெய்வது
சிலுவை

நல்ல
நோக்கம்
கூட
தேவனுடைய
கட்டளையை
உடைக்க
விடக்கூடாது

தேவனுக்கு முன்பாக
குற்றமற்றவர்களை,
மனிதர்களால்
உண்மையாக
குற்றஞ் சாட்ட
முடியாது

இரட்சிக்கப்
பட்டவர்களுக்கு
உலகத்தின் வாழ்க்கை
முறையைவிட உயர்ந்த
வாழ்க்கை முறை
தேவை.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media